**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 88/2022 |
| Name | : Leo Andrews |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்ட கிருஷ்ணராயபுரம் மற்றும் தோகைமலை வட்டார பகுதிகளில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.10.2019ம் தேதி மடத்துக்குளம் வட்டார பகுதிகளில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணியில் இருந்த போது அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு காரத்தொழுவு கிராமத்திற்குட்பட்ட கதவு எண். 198ல் அமைந்துள்ள சுப்புலட்சுமி என்பவருக்கு சொந்தமான வீட்டினை திருப்பூர் மாவட்ட நியமன அலுவலர் தலைமையில் உணவு பாதுகாப்பு அலுவலர் குழுவுடன் சென்று ஆய்வு செய்தோம். ஆய்விற்காக சென்ற போது அங்கிருந்தவரிடம் என்னை அறிமுகம் செய்து கொண்டு மேற்கண்ட வீட்டில் ஆய்வு செய்த போது உரிமயாளர் பற்றிய விவரம் கேட்டதில் அங்கிருந்த எம்.கிருஷ்ணகுமார் என்பவர் நான் தான் உரிமையாளர் என்று அவரது அடையாள ஆவணத்தின் நகலை வழங்கினார். ஆய்வின் போது அங்கு பொது மக்களுக்கு டீ தூள் உணவு பொருட்களை உணவாக விற்றது போக இருப்பு வைத்திருந்த சுமார் 50 கிலோ அளவுள்ள அசாம் கோல்டு டீ தூளை உணவு மாதிரி எடுத்து அது இருந்த நிலையில் அப்படியே அதற்கான தொகை செலுத்தி வாங்கி சட்ட முறைப்படி படிவம் 5A

தயாரித்து எதிரிக்கு சார்வு செய்யப்பட்டது. அங்கிருந்த எம்.சந்திரசேகர் என்பவர் சாட்சியாக இருக்க கேட்டு அவர் சம்மதித்து உணவு மாதிரி எடுக்கும் வரை அங்கிருந்தார். உணவு பாதுகாப்பு சட்ட விதிமுறைகளின் படி நான்கு உணவு மாதிரிகளை பேக் செய்தேன். உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையத்தில் அங்கீகரிக்கப்பட்ட NAPL ஆய்வகத்திற்கு நான்காவது பகுதி உணவு மாதிரியை அனுப்பப் கோரும் சட்ப்பபடியான உரிமை எதிரிக்கு உள்ளதை அவரிடம் கடிதம் மூலம் தெரிவித்தேன். அவர் தனக்கு விருப்பம் இல்லை என்று கூறினார். சட்ட விதிமுறைகளை பின்பற்றி படிவம் 6 மற்றும் அலுவலக முத்திரை உணவு மாதிரியுடன் இணைத்து 04.10.2019 ம் தேதி உணவு பகுப்பாய்வகம், மதுரைக்கு அனுப்பி வைத்தேன். உணவு மாதிரியை எடுத்தற்கான ஒப்புகை மற்றும் உணவு மாதிரி சமர்ப்பிக்கப்பட்டதற்கான கடிதத்தை நியமன அலுவலரிடம் தெரிவித்தேன். உணவு பகுப்பாய்வகம், மதுரைக்கு மேற்கண்ட உணவு மாதிரியை 29.06.2020 அன்று பெறப்பட்டு ஆய்வு செய்ததில் மேற்படி உணவு மாதிரியானது தப்பு குறியீடு, பாதுகாப்பற்றது மற்றும் தரமற்றது என 29.06.2020 அறிக்கை மூலமாக அன்றே நியமன அலுவலகத்தால் மேற்படி அறிக்கை பெறப்பட்டது. மேற்படி அறிக்கை எதிரிக்கு கடிதம் தயார் செய்யப்பட்டு 07.07.2020 அன்று பதிவுத் தபால் மூலம் எதிரிக்கு அனுப்பப்பட்டது. எதிரி தப்பு குறியீடு மற்றும் பாதுகாப்பற்ற உணவை விற்பனை செய்த குற்றத்திற்காக அவர் மீது வழக்கு தொடர 15.07.2020 அன்று நியமன அலுவலர் அவர்களின் மூலம் குற்ற வழக்கு தொடர அனுமதி வேண்டி ஆணையாளர் சென்னை உணவு பாதுகாப்பு துறை அவர்களுக்கு கோப்பு அனுப்பி வைக்கப்பட்டது. அக்கோப்பின் மீது ஆணையாளர் அவர்கள் எதிரி மீது 29.11.2021 ம் தேதி நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கி கடிதம் பெறப்பட்டு புகார் தாக்கல் செய்யப்பட்டது.

அ.சா.ஆ.1– 20.04.2012 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழ் எண். 103 ஒளி நகல்

அ.சா.ஆ.2– எதிரியின் ஆதார் அட்டை ஒளி நகல்

அ.சா.ஆ.3– 04.10.2019 தேதியிட்ட ரொக்க ரசீது அசல்

அ.சா.ஆ.4– 04.10.2019 தேதியிட்ட படிவம் 5(A) அசல்

அ.சா.ஆ.5– 04.10.2019 தேதியிட்ட மகஜர் மனு

அ.சா.ஆ.6– 04.10.2019 தேதியிட்ட படிவம் 6

அ.சா.ஆ.7–04.10.2019 தேதியிட்ட மாதிரி அரசு முத்திரையிட்ட தாள்

அ.சா.ஆ.8– 04.10.2019 தேதியிட்ட உணவு மாதிரி பகுப்பாய்விற்கு அனுப்பிய கூரியர் ரசீது (ரூ.30/–)

அ.சா.ஆ.9– 04.10.2019 தேதியிட்ட உணவு மாதிரி பகுப்பாய்விற்கு அனுப்பிய கூரியர் ரசீது (ரூ.30/–)

அ.சா.ஆ.10– 04.10.2019 தேதியிட்ட திருப்பூர் நியமன அலுவலருக்கு கொடுக்கப்பட்ட கடிதம்

அ.சா.ஆ.11– 04.10.2019 தேதியிட்ட திருப்பூர் நியமன அலுவலர் ஒப்புகை சீட்டு

அ.சா.ஆ.12– 29.06.2020 தேதியிட்ட உணவு பகுப்பாய்வாளரின் அறிக்கை

அ.சா.ஆ.13– 07.07.2020 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட கடிதம்

அ.சா.ஆ.14– 08.07.2020 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் அஞ்சலக ரசீது

அ.சா.ஆ.15– 15.07.2020 தேதியிட்ட நியமன அலுவலரின் பரிந்துரை கடிதம்

அ.சா.ஆ.16– 29.11.2021 தேதியிட்ட உணவு பாதுகாப்பு ஆணையரின் அனுமதி கடிதம்

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யவில்லை

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:54:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்